உள்நாட்டு இறைவரித் திணைக்களம்

# தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான வரி (தே.க.வ)

## 2017.06.30 இல் முடிவடைந்த காலாண்டிற்கான விபரத்திரட்டுக்களைச் சமர்ப்பித்தலும் இறுதிக் கொடுப்பனவுகளை மேற்கொள்ளுதலும்

தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான வரியைச் செலுத்தப் பொறுப்புடையவர்கள் 2017.06.30 ஆம் திகதி முடிவடைந்த காலாண்டிற்கான விபரத்திரட்டுகளைச் சமர்ப்பிப்பதற்கும், இறுதிக் கொடுப்பனவைச் செலுத்துவதற்குமான இறுதித் திகதி :

# 2017 ஜூலை 20

என்பது, தே.க.வ விதியாகும் ஆட்களுக்கு இத்தால் நினைவுபடுத்தப்படுகின்றது.

மேலும்,

(அ) **ஏதேனும் பொருட்களை** (ஏதேனும் விலக்களிக்கப்பட்ட பொருட்கள் தவிர) **உற்பத்தி செய்யும்** வியாபாரத்தினை நடத்தும், அல்லது

(ஆ) ஏதேனும் நிதிசார் சேவை வியாபாரம் (ஏதேனும் விலக்களிக்கப்பட்ட சேவைகள் தவிர்ந்த) உள்ளடங்கலான **ஏதேனும் சேவை வழங்கும் வியாபாரத்தினை** நடத்தும். அல்லது

(இ) **மொத்த அல்லது சில்லறை வியாபாரங்களை** மேற்கொள்ளல் (அத்தகைய பொருட்களின் இறக்குமதியாளரால் நேரடியாக விஷேட நுகர்வுப்பொருள் அறவீட்டுச் சட்டத்தின் கீழ்வரும் மருந்தாக்கல் பொருட்கள் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நபர்களினால் வெளிநாட்டு நாணயத்திற்கான இரத்தினக்கல் அல்லது ஆபரண விற்பனை, ஏதேனும் அச்சிடப்பட்ட புத்தகம், உற்பத்தியாளரிடமிருந்து அல்லது தயாரிப்பாளரிடமிருந்து கொள்வனவு செய்யப்படும் பசும்பால், கீரைவகைகள், கறுவா, இறப்பர் (ஒட்டுப்பால், கிரேப் இறப்பர், இறப்பர் சீட்) ஏதேனும் பொருளை ஏற்றுமதி செய்தல் அல்லது ஏற்றுமதிக்காக ஏதேனும் பொருளை ஏற்றுமதியாளருக்கு விற்பனை செய்தல் எல்பி எரிவாயு விநியோகம், அல்லது சுங்கத் தீர்வையற்ற வர்த்தக கடைகளில் வெளிநாட்டு நாணயக் கொடுப்பனவு முறையில் ஏதேனும் பொருளை விற்பனை செய்தல் மற்றும் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய் போன்றவற்றினை விற்பனை செய்தல், சிகரட், இறக்குமதியாளரினால் இறக்குமதி செய்யப்படும் அத்தகைய பொருட்கள் இறக்குமதியாளரினால் அல்லது உற்பத்தியாளரினால் நேரடியாக விற்பனை செய்யப்படக்கூடிய சூழ்நிலையில், மது வரி (கட்டளைச் சட்டம்) அல்லது உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) விதிப்புக்குட்படுகின்ற எச்எஸ் குறியீடு அத்தியாயம் 87, 2203, 2204, 2205, 2206, 2207 மற்றும் 2208 ஆகியவற்றின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள வாகனங்கள் அல்லது மதுபானங்கள் என்பன நீங்கலாக)

ஒவ்வொரு ஆளும் (தனிநபர், கம்பனி, ஆட்களின் குழுமம்) அல்லது பங்குடமையும் **பொறுப்புடைய புரள்வின் மீது 2% தே.க. வரியினை செலுத்துமாறு கோரப்படுகின்றனர்.**

குறிப்பு :

- பின்வரும் கூறுகள் மேலே குறிப்பிடப்பட்ட ஏதேனும் வகுதிகளின் பொறுப்புடைய புரள்வின் **பகுதியாக இருக்கமாட்டாது.**
  - பெ.சே. வரிக்கூறு
  - **ஏற்பட்ட அறவிட முடியாக் கடன்கள்** (எவ்வாறாயினும், ஏலவே பதிவழிப்புச் செய்யப்பட்ட அறவிட முடியாக் கடன்கள் பின்னர் அறவிடப்பட்டால் அவை கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்)
  - குறித்த காலாண்டில் 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் **செலுத்தப்பட்ட ஏதேனும் உற்பத்தித் தீர்வை** (இறக்குமதியின் போது செலுத்தப்பட்ட உற்பத்தித் தீர்வை தவிர)
  - ஏற்றுமதி அபிவிருத்தி கழிப்பீட்டுத் தொகைத் திட்டத்தின் கீழ் செலுத்தப்பட்ட கழிப்பீட்டுத் தொகை.
  - **அமைச்சரின் அங்கீகாரத்துடன் ஏதேனும் சர்வதேச நிகழ்வுகளுடன் தொடர்புடைய** ஏதேனும் பொருட்கள் அல்லது சேவைகளின் வழங்கலிலிருந்தான ஏதேனும் புரள்வு.
- இறக்குமதி செய்யப்பட்ட ஏதேனும் பொருட்கள் (விலக்களிக்கப்பட்ட பொருட்கள் தவிர) சுங்க நிலையில் பெ.சே.வரி நோக்கங்களுக்கான பெறுமதி **மீது சுங்க நிலையில்** தே.க.வரிக்குப் பொறுப்பாக்கப்படும். அத்தகைய பொருள் எவ்வித தயாரிப்புக்கும் உட்படாது உடனடியாக விற்பனை செய்யப்படுமாயின் அத்தகைய பொருட்களின் விற்பனையும் கூட மொத்த அல்லது சில்லறை வியாபாரம் என்ற வகையில் பெ.சே.வரிக்குப் பொறுப்பாக்கப்படும்.
- புகையிலை உற்பத்திகளின் விற்பனை தவிர்ந்த எவரேனும் விநியோகத்தரின் (பொருளாதார சேவைக் கட்டணச் சட்டத்தில் குறிப்பிட்டவாறு) மொத்த வியாபாரத்திலிருந்து 75% பொறுப்புடைய புரள்வு மற்றும் பிற மொத்த அல்லது சில்லறை வியாபாரத்திலிருந்து பொறுப்புடைய புரள்வில் 50% தள்ளுபடியாக கழிப்பனவு செய்யப்பட முடியும். **(இந்த சீராக்கலினை மேற்கொள்வதற்கு முன்னர் காலாண்டுக்கு விலக்களிப்புப் பெற்ற பொறுப்பு புரள்வினை விஞ்சும் போதிருக்கும் பொறுப்புக்கள்).**
- **வங்கி அல்லது நிதி வியாபாரத்திலீடுபடும்** எவரேனும் ஆளொருவரின் பொறுப்புடைய புரள்வானது, நிதிசார் சேவைகள் மற்றும் நிதிசாரா சேவைகளிலிருந்து (ஏதேனும் வரி விலக்களிப்புக்குட்படக் கூடியது) பெறுமதி ஈட்டக்கூடிய முறையின் அடிப்படையில் கணிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி சேர்ப்பின் மொத்தமாக இருத்தல் வேண்டும்.

**வங்கி அல்லது நிதி வியாபாரத்தில் ஈடுபடும் எவரேனும் நபர் தமது கொடுப்பனவுகளை உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் பெயருக்கு 7041556 என்ற கணக்கு இலக்கத்திற்கு (இலங்கை வங்கி தப்ரபோன் கிளை) வரவு வைப்பதன் மூலம் இலங்கை வங்கியின் ஏதாவதொரு கிளையிலும் மேற்கொள்ளலாம் என்பதுடன வங்கி அல்லது நிதி வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றவர்கள் தமது கொடுப்பனவுகளை இலங்கை வங்கியின் தப்ரபேன் கிளையிலுள்ள 7041560 என்ற கணக்கு இலக்கத்தில் வரவு வைப்பதன் மூலம் இலங்கை வங்கியின் எந்தவொரு கிளையிலும் மேற்கொள்ள முடியும். காசோலைகள் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் பெயருக்கு வரையப்படுதல் வேண்டும்.**

**பெறுமதி சேர் வரியை உரிய திகதியில் அல்லது அதற்கு முன்னர் செலுத்தத் தவறியமை, ஏதேனும் விசேடமான சூழ்நிலைகளின் காரணமாகவே நிகழ்ந்தது எனவும் அக்காரணம் நியாயமானது எனவும் ஆணையாளர் நாயகம் திருப்தியடைந்தாலேயன்றி அதற்கான தண்டத் தொகை இல்லாதாக்கப்படவோ குறைக்கப்படவோ மாட்டாது.**

**காசோலையின் மறுபுறத்தில் உங்களது வரி செலுத்துனர் அடையாள இலக்கத்தையும் (TIN) வரிவிதிப்பனவு காலத்தையும் தயவுகூர்ந்து குறிப்பிடவும்.**

**தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான வரிக்கான கொடுப்பனவுகளைச் செய்கின்ற போது புதிய கொடுப்பனவுப் படிவங்களைப் பயன்படுத்த வேண்டும். அத்துடன் பின்வரும் கொடுப்பனவுக் குறியீடுகளை அவற்றுடன் தொடர்புடைய காலப் பகுதிகள் தொடர்பில் குறிப்பிடுவதும் அவசியமாகும்.**

| காலப் பகுதி | | உரிய திகதி | கொடுப்பனவுக் குறியீடு |
|---|---|---|---|
| 2017.06.01 | 30.06.2017 | 2017.07.20 | 17203 |

**மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து 1944 எனும் இலக்கத்தினை அழைப்பதனூடாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் அழைப்பு நிலையத்துடன் தொடர்பு கொள்ளவும்**

**உள்நாட்டு இறைவரி இணையத்தளம் : www.ird.gov.lk**

**தயவுசெய்து கொடுப்பனவை உரிய நேரத்தில் மேற்கொள்ளவும்**

**உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம்**

வரி - சிறந்ததொரு எதிர்காலத்திற்காக